போன்ற பணிகளைச் செய்ய சமீபத்தில் மானியம் கொடுத்த மத்திய அரசு, தமிழ் நாடு அரசாங்கத்திற்கும் கொடுக்க வேண்டு மென்று இரண்டு, மூன்று மாதத்திற்கு முன்னால் நடைபெற்ற மாநாட்டிலேகூட வற்புறுத்திக் கூறியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து அரசு வற்புறுத்தும். நிதிநிலை பெற்றதற்குப் பிறகு அந்த வேலைகளைக் கவனிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசாங்கம் உதவிக்கு வரவேண்டும்; மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியிலிருந்தும், நான் அளித்த பதிலில் இருந்தும், மத்திய அரசாங்கம் உதவி செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

(3) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ் நாடு 1975-ம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர் களே, தமிழ் நாடு 1975-ம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(4) 1975-76 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி அறிக்கை மீது விவாதம்

* **திரு. ஆலடி அருணா:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தில் கோரப்பட்டிருக்கின்ற துணை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

கடந்த 3 தினங்களாக ஒரு முக்கியமான பிரச்னை மீது பல்வேறு பத்திரிகைகள் பல கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பிக்கொண்டு இருக்கின்றன. 'மத்திய சர்க்கார் இந்த மாநில சர்க்காருக்கு ஒழுங்காக ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை, வறட்சிக்குப் போதுமான பணம் கொடுக்கவில்லை, மதுவிலக்கால் ஏற்பட்ட இழப்புக்கு ஈடு கொடுக்கவில்லை, எனவே, இந்த மாநில அரசின் பொருளாதாரம் மிகவும் குன்றிக்கிடக்கிறது. இந்த குன்றிக்கிடக்கிற பரிதாப நிலைக்கு மத்திய சர்க்கார்தான் காரணம்' என்ற அடிப்படையில் பத்திரிகைகளில் செய்தி கொடுத்து இருக்கிறார்கள்.

மத்திய சர்க்காரைப் பற்றி அரசாங்கம் தன்னுடைய கருத்தை மாறுபட்ட முறையில் அல்லது எதிர்க்கின்ற அடிப்படையில் சொல்வதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தவறாகக் கருதவில்லை. ஆனால், இந்த நேரத்தில் நான் சொல்வதற்கு ஆசைப்படுவது எல்லாம், மத்திய சர்க்கார் மீது குறை சொல்லும் அரசாங்கம் இந்தக் குறை ஏற்படுவதற்கான நியாயமான காரணங்களை, மக்கள் ஆதரிக்கும் வகையில் சொல்வார்களானால், அதைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

இன்றையதினம் மத்திய சர்க்கார் வறட்சிக்குப் போதுமான பணம் தரவில்லை என்ற குற்றச்சாட்டை நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பகிரங்கமாகச் சொல்வதற்கு